ஹோமாகம பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹோமாகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹோமாகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத் தேய்வு குறைவாகவும் அதிகமாகவும் கணக்கிட்டதன் காரணமாக, இந்த ஆண்டிற்கான மொத்த தேய்மானச் செலவு ரூபா.404,010 குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது	இது சரி செய்யப்பட்டுள்ளதுடன் நிலையான சொத்து பதிவேடுகளிலும் உள்ளடக்கப பட்டுள்ளதாக.	வருடாந்த பெறுமானத் தேய்வு சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.
(ஆ)	எதிர்வரும் ஆண்டிற்கான பெறப்பட்ட வீத வரிகளுடன் தொடர்புடைய வழங்கப்பட்ட கழிவு மீதி ரூபா.2,627,240 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கொடுக்கப்பட்ட கழிவு நடப்பாண்டின் செலவு அல்ல என்பதால், அது நிதிக் கூற்றுக் களில் காண்பிக்கப்படவில்லை என்பதாக.	கொடுக்கப்பட்ட கழிவை சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் 18 மூலதனத் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா40,105,238 ஆன செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினமாகக் கணக்கிடப்பட்டுள்ளதாக .	செலவினங்களை சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	மீளாய்வாண்டில் 13 மூலதனத் திட்டங்களுக்காகப் பெறப்பட்ட பண்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை உதவியின் மொத்தத் தொகையான ரூபா.23,870,047, அரசாங்கத்திடமிருந்து மீண்டெழும் செலவினங்களுக்காக மாற்றல்களாகக் கணக்கிடப்பட்டிருந்தன.	2024 ஆம் ஆண்டில் இது மீண்டெழும் செலவினமாகக் கணக்கிடப்பட்டுள்ளதாக .	பெறப்பட்ட மானியங்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	பௌதீக ரீதியாக இல்லாத ரூபா.4,228,544 ஆன இருப்பு மீதியொன்று ரூபா.13,546,185 பொது களஞ்சிய பொருட்களின் இருப்பு இருப்பில், சேர்க்கப் பட்டதால், மீளாய்வாண்டின் நிதிக் அறிக்கைகளில், ரூபா.4,228,544 ஆன இருப்புக்கள் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.	கணிப்பீட்டு அறிக்கையில் பௌதீக மீதியை குறைத்து காண்பித்துள்ளதாக்	பௌதீக ரீதியாக இல்லாத இருப்பு மீதி தொடர்பாக பரீட்சித்து சரியாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக் கூற்றுக்களில் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புத்தொகையின் மீதி ரூபா.95,798,821 ஆக இருந்த போதிலும், பேரேட்டில் உள்ள மீதி ரூபா.92,437,771 ஆக இருந்தமையால் ரூபா.3,368,050 வித்தியாசம் காணப்பட்டது.	திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன.	வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிதிக் கூற்றுக்களில் ஊழியர்களிடமிருந்து பெற வேண்டியதாக ரூபா.34,596,677 மீதியாக காட்டிய போதிலும், பேரேட்டில் மீதி ரூபா.34,589,677 ஆக இருந்தமையால் ரூபா.7,000 வித்தியாசம். காணப்பட்டது.	ஊழியர் கடன் அட்டவணையின் பிரகாரம் மீதி ரூபா.34,596,677 ஆக உள்ளதாக	வேறுபாடுகளுக்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீகொட பொருளாதார நிலையத்திற்கு தவறாக பட்டியல் இடப்பட்ட ரூபா.6,000,000 வாடகை மற்றும் ரூபா.183,000,000 அபராதம் என மொத்தம் ரூபா.189,000,000 தொகை, உடன்படிக்கை சரி செய்யப்படாமலும் ஆளுனரின் அங்கீகாரம் பெறாமலும், ஆண்டின் வருமானத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.	குத்தகையாளரர் வாடகை மதிப்பீட்டிற்கு உடன்படாததால், இந்த பட்டியல் ஆவணங்கள் ல திருத்தம் மூலம் திருத்தம் செய்து கொள்ளப்பட்டதாக	முறையான அங்கீரத்துடன் கணக்குகளிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன. .

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயான பூமிகள் மற்றும் புதை குழிகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 128 ஆம் பிரிவு	சபை எல்லைக்குள் அமைந்துள்ள 38 மயானங்களின் எல்லைகளை நிர்ணயித்து, அவற்றை சபையிடம் கையேற்று வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அரசாங்க காணியாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அனைத்து மயான காணிகளையும் கையேற்பதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக	கையேற்கும் செயன்முறையை விரைவுபடுத்த வேண்டும்.
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் நிதிப் பிரமாணம் 571	2014 ஆம் ஆண்டு முதல் காணப்படும் ரூபா.44,147,784 ஆன பொது நிர்மாண வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	முன்னைய காலகட்டத்துடன் தொடர்புடைய வைப்புத் தொகைகள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வருமானமாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதாக	வருமானத்திற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பொது நிர்வாக சுற்றறிக்கை	சபைக்கு 38 சொந்தமான எரிபொருளுக்காக எரிவு பரிசோதனை மேற்	எதிர்காலத்தில் அந்த வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை	சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை

	இலக்கம் 30/2016	கொள்ளப்பட்டிருக்க வில்லை	மேற்கொள்ளப்படவில் லை என்பதாக	செய்யப்பட வேண்டும்.
(ஈ)	பெறுகை வழிகாட்டி கோவையின் 5:3:1(அ)	தேசிய பெறுகை முகவர் நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுக்கொளள்ப்பட்ட கேள்வி ஆவணங்களின் பொருத்தமான மாதிரியைப் தேவையாயின் ஒப்பந்தங்களில் எழும் குறிப்பிட்ட சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் பயன்படுத்த வேண்டிய போதிலும் ஜல்தர சுடுகாட்டின் நிர்மாணம் தொடர்பாக ரூபா.6,823,834 ஆன செலவினத்திற்காக அத்தகைய ஏற்றுக்கொளள்ப்பட்ட ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவி ல்லை ்.டும குறைந்தபட்ச மாற்றங்களுடன் தேசிய் என்றாலும்,	பெறுகை வழிகாட்டி கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள நியம ஆவணங்கள் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்வதாக	பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைமேற்கொ ாள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.336,681,651 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.373,112,282 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

	வருமான மூலம்	2024 மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பிடப் பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்ப ட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	219,170	224,589	204,404	154,555	228,802	178,254	176,900	123,024
(ii)	வாடகை	20,105	18,237	17,940	2,400	18,969	19,435	18,522	(9)
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	7,063	4,483	4,231	277	5,791	4,746	4,838	25
(iv)	ஏனைய வருமானம்	637,569	659,072	930,399	573,928	632,929	843,660	973,413	620,966
	மொத்தம்	**883,907**	**906,381**	**1,156,974**	**731,160**	**886,491**	**1,046,095**	**1,173,673**	**744,006**

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா.154,456,203 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	நிலுவை வீதவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) மாகாண சபையின் பிரதான செயலாளரின் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் பெறவேண்டிய முத்திரை கட்டண அளவு ரூபா.478,232,148 ஆக இருந்தது.	பெறவேண்டிய முத்திரை கட்டண அளவு ரூபா.478,232,148 ஆன தொகை மதிப்பீடொன்று மாத்திரமாக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த முத்திரை அட்டவணை தயாரிக்கப்பட்ட பின்னர் உள்ளவாறான பட்டியலிடலை கண்டு பிடிக்கலாம் என்பதாக	பெறவேண்டிய வருமானத்தை விரைவில்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்..

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சபை வளாகத்தில் மின் முறைமையை நிறுவுவதற்காக ரூபா.2,242,000 தொகைக்கு மின்மாற்றியொன்றை நிறுவுவதற்கு 2024 நவம்பர் 25 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. இந்த திட்டம் இரண்டு மாத காலத்திற்குள் முடிக்கப்படவிருந்த போதிலும், அது 2025 ஏப்ரல் 25 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், 02 மாதங்களுக்கு ரூபா.112,100 செயலாற்றல் உத்தரவாதம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தாமதம் காரணமாக, மின்சார சபையால் வழங்கப்பட்ட கேபிள்கள் மற்றும் ஏனைய பிற பாகங்கள் தவறாக இடம்பெயரும் அபாயம் காணப்பட்டது.	செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை உடனடியாக முடிக்கவும், செயலாற்றல் பிணைப் பொறுப்பின் உத்தரவாத காலம் காலாவதியாகி விட்டதால் அதை நீடித்து தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக	விரைவில் செயற் திட்டத்தை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர், களஞ்சிய கடன்கொடுத்தோர் , பொது தொழில் கடன் கொடுத்தோர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற கடன் கொடுத்தோரின் மீதிகளின் மொத்த நிலுவை ரூபா.114,762,400 ஆக இருந்ததுடன், அதைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அதைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2024 ஜனவரி 01 ஆந் திகதி நிலுவையில் இருந்த பொது முற்பணங்களின் மீதி ரூபா.6,136,853 தொகையை ஆண்டில் தீர்வு செய்யப்படவில்லை. இதில், மொத்தம் ரூபா.6,099,044 தொடர்பாக திட்டவட்டமான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கில் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் 12 ஆம் குறிப்புகளின் கீழ் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.	திட்டவட்டமான தகவல்கள் கிடைக்காத மீதிகளை உடனடியாக அடையாளம் காணப்பட்டு, முன்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 ஆம் ஆண்டு முதல் வெத்தரா உப அலுவலகப் பகுதியில் எந்தவொரு வீதவரி மதிப்பீடும் மேற்கொள்ளப்படாததால், 2024 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் குறைவடைந்துள்ளது	2023 பெப்ரவரி 23 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக	புதிய மதிப்பீட்டை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி ரூபா.1,619,617,792 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அந்நடவடிக்கைகள் தகுதிவாய்ந்த சுயாதீன மதிப்பீட்டாளர்களால் அது மேற்கொள்ளப்படவில்லை.	பிரதேச சபை மூலம் நியமிக்கப்பட்ட சொத்து முகாமைத்துவக் குழுவின் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதாக.	தகுதிவாய்ந்த சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவர் காணியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீகொட பொருளாதார நிலையம் அமைந்துள்ள காணி 2003 ஆம் ஆண்டு 33 ஆண்டுகளுக் கிராமிய பொருளாதார அமைச்சிற்கு குத்தகை ஒப்பந்தம் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆதனங்கள் சபைக்குச் சொந்தமான சொத்தாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 மார்ச் வரை அதன் சட்டப்பூர்வ உரித்தை சபைக்கு கையேற்கப் பட்டிருக்கவில்லை.	மீகொட விசேட பொருளாதார நிலையம் அமைந்துள்ள காணியின் உரித்துச் சான்றிதழைப் பெறுவதற்காக காணி உரித்தை தீர்வு செய்வதற்கு திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக.	இந்தச் சொத்தின் சட்டப்பூர்வ உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்கு உரித்து கையேற்கப்படாத 41 விளையாட்டரங்குகள் காணப்பட்டன. மாற்றப்படவில்லை.	சில அரங்கங்கள் பொது வசதி காணிகளில் அமைந்துள்ளதாக.	இந்த விளையாடரங்கங்களின் சட்டப்பூர்வ உரித்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி ஹோமகம பிரதேச சபைக்கு சபையால் ஒப்படைக்கப்பட்ட ஒரு டிராக்டரொன்று மீளாய்வாண்டின் இறுதி வரை கையேற்பதற்த நடவடிக்கை எடுக்கவில்லை.	கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக	கையேற்றல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	ஹோமாகம பிரதேச சபைக்குச் சொந்தமான 09 காணிகளின் உரிமைகளையும், வீதிப் பட்டியல் படி இருந்த 620 வீதிகளின் உரித்தையும் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	11 காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வீதி அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் வர்த்தமானியில் வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக	கையேற்கும் நடவடிக்கைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மூன்றாவது மிகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தின் தரச் சான்றிதழ் மற்றும் 03 வருட உத்தரவாதக் காலத்துடன் ரூபா 1768 என்ற குறைந்த விலையில் மின்குமிழ்களை வாங்க இயலுமாக இருந்த போதும் கூறுவிலை அழைக்காத ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா.17,226,000 இற்கு 9000 மின்குமிழ்களை கொள்வனவு செய்தமையால் சபைக்கு ரூபா.1,432,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	2024 ஜனவரி 01 ஆந் முதல் பட்டியல் செய்யப்பட்ட அனைத்து LED பட்டியல்களின் விலையும் 18 சதவீதத்தினால் அதிகரித்தமை, அனைத்து நிறுவனங்களிலும் 18 சதவீத விலை உயர்வு தொடர்பில் பாதிக்கும் பொதுவான காரணியாக இருப்பதால், அந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக	பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.
(ஆ)	Aluminum Binding Wire 1kg இற்கு மிகக் குறைந்த விலையை வழங்கி 05 வருட உத்தரவாதக் காலத்தை வழங்கிய நிறுவனம் மாதிரிகளைச் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தால் நிராகரிக்கப்பட்டிருந்த போதும் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள சபை எந்த முயற்சியும் எடுத்திருக்கவில்லை. பின்னர், 170 கிலோ கம்பியை அதிக விலைக்கு வாங்கியதால், சபைக்கு ரூபா.357,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	விலைகள் மற்றும் மாதிரிகளைச் சமர்ப்பித்த மற்ற நிறுவனத்தின் விலைகள் பரிந்துரைக்கப்பட்டதாக	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்ப் பின்பற்ற வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஜல்தர சுடலைச்சாலையின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட போதிலும், அதற்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரை கிடைததிருக்கவில்லை. முதல் கட்டத்தின் கீழ், ரூபா.4,000,000 தொகைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பணி முடிந்ததும், ரூபா.3,460,271 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ், 2020 திசெம்பர் 28 ஆந் திகதி , ரூபா.16,817,777 தொகைக்கு 06 மாதங்களுக்குள் வேலையை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு அதற்கு ரூபா.3,363,555 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், முற்பணம் செலுத்தப்பட்ட அளவினை மேவுகை செய்யும் அளவில்	தற்போது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் அளவிற்கு ஏற்ப கொடுப்பனவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, முற்பண தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	நிர்மாணத்தை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையை பூர்த்தி செய்யாமல் ஒப்பந்தக்காரர் நிர்மாண நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்ததுடன் செயலாற்றல் பாதுகாப்பும் 2024 மே 10, ஆந் திகதி காலாவதியாகியிருந்தது. இதன் காரணமாக, பாதி முடிக்கப்பட்ட சுடலைச்சாலை வெயில் மற்றும் மழையில் பாதிக்கப்பட்டு, புற்கள் வளர்ந்து சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

3.6 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
இறந்த, ஓய்வு பெற்ற, சேவையை விட்டு வெளியேறிய, பணி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட 07 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,095,068 ஆன இடர் மற்றும் விழா முற்பண கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2024 திசெம்பர் 31, இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	ஊழியர் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான வேதர உப அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட 61 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வாகன கணக்கெடுப்பில், 03 டிராக்டர்கள், 04 டிரெய்லர்கள், ஒரு வீதி நொறுக்கி மற்றும் ஒரு மோட்டார் கிரேடர் ஆகியவற்றை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்த வேண்டும் அல்லது முடியாவிட்டால் கைவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிக்குள் அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.	சபைக்குச் சொந்தமான வாகனங்களை அப்புறப்படுத்த கொழும்பு மாநகர சபையைச் சேர்ந்த ஒரு இயந்திர பொறியாளரின் உதவியுடன் அந்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதாக.	கைதவிர்ப்பு அல்லது பழுதுபார்ப்பு பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ப்பட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	66 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா.16,558,500 ஆன மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.	ஏற்றுக்கொள்வதாக	பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும்.
(ஆ)	39 செலவின விடயங்களுக்கு ரூபா 27,080,200 மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் செலவிடப்படா திருந்ததுடன் அந்தளவு ரூபா.23,216,852 ஆக இருந்தது.	ஏற்றுக்கொள்வதாக	பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையால் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை தொடர்புடைய கழிவுப்பொருள் களஞ்சியங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கு ஓராண்டுக்கு சுமார் ரூபா 51 மில்லியன் அளவில் செலவு செய்யப்படுவதுடன். 2024 திசெம்பர் மாதத்தில் பல நாட்களாக உக்காத கழிவு போக்குவரத்து நிறுத்தப்பட்டதால், கழிவுப்பொருட்களை ரூபா.1,260,000 மேலதிக செலவில் டோசர் செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், உக்கும் கழிவுகளை வேறொரு தொகுதிக்கு கொண்டு செல்வதற்கு பதிலாக சேதனப் பசளையை தயாரித்து உரத்தை விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானம் ஒன்றை ஈட்டிக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	சபை அதிகாரப் பிரதேசத்தில் உக்கும் கழிவு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான காணியொன்று இல்லாததால், ஹோமாகம களஞ்சியத்தில் பராமரிக்கப்படும் உரத் தொகுதிக்கு சேதனப் பசளையை உற்பத்தி செய்யக் கூடிய உக்கும் கழிவுகளை இலவசமாக வழங்குவதன் மூலம் உக்கும் கழிவுகளை கொண்டு செல்வதற்கான செலவுகளைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தற்போது குடியிருப்பாளர்களின் எதிர்ப்பு காரணமாக இது நிறுத்தப்பட்டுள்ளதால், கரடியான குப்பைக் களஞ்சியத்திற்கு மீண்டும் மஉக்கும் கழிவுகளை வழங்கவும், ஒரு பிரதேசமொன்று வீதியொன்று தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிக்கு மானிய அடிப்படையில் உரத் தொட்டிகளை வழங்கவும் ஒரு திட்டம் நடைபெற்று வருவதாக	உக்கும் கழிவுகளை மீள்சுழற்சி செய்து வருமானத்தை உழைப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.